**மாண்பமை நீதித்துறை நடுவர் நீதிமன்றம், சங்கரன்கோவில்**

**முன்னிலை : திரு.M. மாரி, M.S.W., L.L.B.,**

**நீதித்துறை நடுவர், சங்கரன்கோவில்**

Cr.M.P.No. 664/2026

**சங்கரன்கோவில் டவுண் காவல் நிலைய குற்ற எண்.231/26**

**பிரிவு 303(2) BNS**

உத்தரவு நாள்: 02.06.2026

CNR No. TNTS09-001564-2026

முத்துக்குமார்,
த/பெ. முருகன்

... மனுதாரர்/எதிரி

/எதிர்/

காவல் உதவி ஆய்வாளர்,
சங்கரன்கோவில் டவுண் காவல் நிலையம்
குற்ற எண்.231/2026

... எதிர்மனுதாரர்/வாதி

**மனுநாள்: 29.05.2026 மனு 480 BNSS**

இரு தரப்பும் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது. அரசு தரப்பு பதில் பெறப்பட்டது.

2. மனுதாரர்/எதிரி தரப்பில், மனுதாரர்/எதிரி 13.05.2026 முதல் பிடியாணை மூலம் காவலில் இருந்து வருவதாகவும், அவர் மீது பொய் வழக்கு போடப்பட்டுள்ளதாகவும், அவர் கூலி வேலை செய்து வருபவர் என்றும், அவர்கள் நிரந்த முகவரி உடையவர்கள் என்றும், அவர் நீதிமன்ற நிபந்தனைக்கு கட்டுப்படுவார் என்றும், எதிரியை பிணையில் விடுவிக்கும்பட்சத்தில் தகுந்த பிணையதாரர்களை வழங்குவதாகவும், எனவே மனுதாரர்/எதிரியை பிணையில் விடுவிக்க உத்தரவிட வேண்டுவதாக எடுத்துரைக்கப்பட்டது. எனவே மனுதாரர்/எதிரியை பிணையில் விடுவிக்க உத்தரவிட வேண்டுவதாக எடுத்துரைக்கப்பட்டது.

3. அரசு தரப்பில், திருவேங்கடம் காவல் நிலைய குற்ற எண். 156/2026 வழக்கானது புலன் விசாரணையில் இருந்து வருவதாலும், மேற்படி வழக்கானது புலன் விசாரணையில் இருந்து வருவதாலும், மேலும், எதிரியை பிணையில் விடும்பட்சத்தில் எதிரி நீதிமன்ற விசாரணைக்கு ஆஜராகாமல் தலைமறைவாகக்கூடும் என்பதாலும், எதிரி மீண்டும் மீண்டும் இதுபோன்ற குற்றச் செயலில் ஈடுபட வாய்ப்புள்ளதாலும், சாட்சிகளை மிரட்டி கலைக்கக்கூடும் என்பதாலும், மேலும், இவ்வழக்கில் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யாமல் இருப்பதாலும், மேலும், எதிரிக்கு குற்ற எண். 229/2026 பிரிவு 303(2) BNS வழக்கின் எதிரி என்றும், மேற்படி

எதிரியை ஜாமீனில் வெளியே விட கடுமையான ஆட்சேபணை தெரிவிப்பதாக எடுத்துரைக்கப்பட்டது.

4. இரு தரப்பும் கேட்கப்பட்டன. வழக்கு ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டன. வழக்கு ஆவணங்களை பரிசீலிக்கப்பட்டதில், மனுதாரர்/எதிரியானவர் 21 நாட்களாக காவலில் இருந்து வருகிறார் என்று தெரிய வருகிறது. இவ்வழக்கின் சொத்து கைப்பற்றப்பட்டுவிட்டதாக அரசு தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதைக் கருத்தில் கொண்டும், மேலும், இவ்வழக்கின் எதிரி புலன் விசாரணைக்கு ஒத்துழைப்பு தருவார் என்று கருதியும், மேலும், எதிரியை பிணையில் விடுவது எந்த விதத்திலும் அரசு தரப்பு வழக்கை பாதிக்காது என்று கருதியும், இந்த வழக்கின் தன்மை மற்றும் நீதியின் நலனைக் கருத்தில் கொண்டு மனுதாரர்/எதிரியை பிணையில் கீழ்க்கண்ட நிபந்தனைகளின் பேரில் விடுவிக்க இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது. நிபந்தனைகள் :–

1. மனுதாரர்/எதிரி தானும், தனி இரு நபர்களும் தலா ரூ.10,000/–த்திற்கு பிணைப்பத்திரம் இயற்றித் தரவேண்டும். மேற்குறிப்பிட்ட இரு நபர்களுள் ஒருவரேனும் இரத்த சம்பந்தப்பட்டவராக இருக்க வேண்டும்.
2. மேற்குறிப்பிட்ட இரண்டு பிணையதாரர்களும் கடந்த 6 மாதத்திற்குள் எடுக்கப்பட்ட புகைப்படத்தை நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் பிணையப்பத்திரத்தில் ஒட்ட வேண்டும்.
3. மனுதாரர்/எதிரி பிணைப்பத்திரம் நிறைவேற்றும் நேரத்தில் தனது மின்னஞ்சல் முகவரி மற்றும் தொலைபேசி எண்ணை இந்த நீதிமன்றத்தில் சமர்ப்பிக்க வேண்டும்.
4. மனுதாரர் / எதிரி புலன் விசாரணைக்கு ஒத்துழைப்பு அளிக்க வேண்டும்.
5. மனுதாரர் / எதிரி பிணையில் வெளிவந்த பிறகு எதிர்மனுதாரர் காவல் நிலையத்தில் காலை 10.00 மணிக்கு ஆஜராகி 15 நாட்களுக்கு தொடர்ந்து கையொப்பமிட வேண்டும்.

ஒம்/–எம்.மாரி)
நீதித்துறை நடுவர்,
சங்கரன்கோவில்.